தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253


# நமது தினகனி

NAMADHU DHINA KANI

காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 165 | 4 Pages | 12.1.2025 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
| --- | --- | --- | --- | --- | --- | --- |
| மலர்: 02 | இதழ்: 165 | 4 பக்கங்கள் | 12.1.2025 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்**
**தன்னையே கொல்லுஞ் சினம்**

**விளக்கம்: ஒருவன் தன்னைத்தான் காத்துக் கொள்வதானால் சினம் வராமல் காத்துக் கொள்ள வேண்டும், காக்கா விட்டால் சினம் தன்னையே அழித்து விடும்.**

## ரஷியா: கல்லூரி மாணவிகள் குழந்தை பெற்றால் ரூ.81,000 மக்கள் தொகையை அதிகரிக்க புதிய முயற்சி




மாஸ்கோ, ஜன.12

கல்லூரி மாணவிகள் ஆரோக்கியமான குழந்தைகளை பெற்றால் ஒரு லட்சம் ரூபிள் வழங்கப்படும் என்று ரஷியாவில் அறிவிக்கப்பட்டுள்ளது. சீனா, ஜப்பான், தென் கொரியா நாடுகளை தொடர்ந்து, பிறப்பு விகிதத்தை அதிகரிக்க ரஷிய அரசும் ஊக்கத்தொகை வழங்கும் அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

ரஷியாவில் உயிரிழப்பு விகிதத்தைவிட பிறப்பு விகிதம் குறைவு, மக்கள் வேறு பகுதிகளுக்கு குடியேற்றம் போன்ற காரணங்களால் மக்கள் தொகை தொடர்ந்து குறைந்து வருகின்றது. ரஷியாஉக்ரைன் இடையேயான போர் மக்கள்தொகை விகிதத்தை மேலும் கவலை அடையவைத்துள்ளது. ரஷியாவில் வரலாறு காணாத அளவுக்கு கடந்தாண்டு பிறப்பு விகிதம் குறைந்துள்ளது. 2024 முதல் பாதியில் வெறும் 5,99,600 குழந்தைகள் மட்டுமே ரஷியாவில் பிறந்துள்ளன. 25 ஆண்டுகள் தரவுகளில் இதுவே மிகக் குறைந்த அளவு. இதனை நாட்டின் எதிர்கால பேரழிவு என்று ரஷிய அரசு குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில், ரஷியாவில் ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றெடுக்கும் பொருட்டு பல்கலைக்கழக மாணவிகளுக்கு நிதியுதவி திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இத்தொகையைப் பெறுபவர்கள் 25 வயதுக்குட்பட்ட உள்ளூர் பல்கலைக்கழகம் அல்லது கல்லூரியில் முழுநேர மாணவர்களாகவும் கரேலியாவில் வசிப்பவர்களாகவும் இருக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, அந்தப் பெண்களுக்கு 1,00,000 ரூபிள் (இந்திய மதிப்பில் ரூ. 81,000) ஊக்கத்தொகை கிடைக்கும்.

இதையடுத்து ரஷியாவின் மக்கள்தொகையை அதிகரிக்க மத்திய அரசுடன் இணைந்து மாகாண அரசுகளும் பல்வேறு விழிப்புணர்வையும் பிரசாரத்தையும் முன்னெடுத்துள்ளனர். கரேலியா மாகாணத்தில் உள்ள பல்கலைக்கழகம் அல்லது கல்லூரிகளில் முழு நேர மாணவிகளாக பதிவு செய்யப்பட்ட 25 வயதுக்கு உள்பட்டவர்கள் ஆரோக்கியமான குழந்தைகளை பெற்றுக் கொண்டால் இந்திய மதிப்பின்படி ரூ. 81,000 ஊக்கத்தொகையாக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் பிரசவத்தின்போது குழந்தை உயிரிழந்தால் ஊக்கத்தொகை வழங்கப்படாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், பிறந்த பிறகு நோய் காரணமாக குழந்தைகள் உயிரிழந்தாலோ அல்லது குறைபாடுகளுடன் பிறக்கும் குழந்தைகளின் தாய்மார்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படுமா என்பது தெரிவிக்கப்படவில்லை. மேலும், ரஷியாவின் பல்வேறு மாகாணங்களில் இதுபோன்ற ஊக்கத்தொகை அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



## ஆபாச நடிகைக்கு பணம் அளித்த வழக்கு: டொனால்டு டிரம்ப் விடுவிப்பு

வாஷிங்டன், ஜன.12


ஜனவரி 20ம் தேதி அமெரிக்க அதிபராக டிரம்ப் பதவியேற்க உள்ள நிலையில், அமெரிக்காவை சேர்ந்த ஆபாச பட நடிகை ஸ்டோமி டெனியல்ஸ், டொனால்டு டிரம்ப் மீது பாலியல் குற்றச்சாட்டு சுமத்தினார்.

கடந்த 2006ம் ஆண்டு டொனால்டு டிரம்ப் தன்னுடன் பாலியல் உறவு வைத்துக் கொண்டதாக ஸ்டோமி டெனியல்ஸ் குற்றஞ்சாட்டினார். மேலும்2016ம்ஆண்டுஅமெரிக்கஅதிபர்தேர்தலுக்குமுன்புதன்னுடனான பாலியல் உறவு விவகாரத்தை வெளியே கூறக் கூடாது என்பதற்காக டிரம்ப் தனக்குபணம்கொடுத்ததாகவும்ஸ்டோமிடெனியல்ஸ்தெரிவித்திருந்தார்.

அதே நேரத்தில் தேர்தல் பிரசாரத்திற்கு திரட்டப்பட்ட நிதியில் இருந்து டொனால்டு டிரம்ப் போலி வணிக பதிவுகளை உருவாக்கி 1,30,000 அமெரிக்க டாலர்களை ஸ்டோமி டெனியல்சுக்கு கொடுத்துள்ளதாக குற்றச்சாட்டு எழுந்தது. இந்த விவகாரம் பூதாகாரமான நிலையில் டிரம்பிற்கு எதிராக பண மோசடி உள்பட பல்வேறு பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடைபெற்றது.

இந்த வழக்கில் டொனால்டு டிரம்ப் குற்றவாளி என்று கடந்த ஆண்டு ஜூன் மாதம் மன்ஹாட்டன் கோர்ட்டு தீர்ப்பளித்தது. இந்த நிலையில் இந்த வழக்கில் இருந்து டொனால்டு டிரம்ப் நிபந்தனையின்றி விடுவிக்கப்படுவதாக கோர்ட்டு தெரிவித்துள்ளது. குற்றச்சாட்டுக்கள் உறுதி செய்யப்பட்ட போதிலும் அவர் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். டொனால்டு டிரம்ப் வரும் 20 ஆம் தேதி அதிபராக பதவியேற்க உள்ள நிலையில் அவருக்கு இந்த தீர்ப்பு பெரும் நிம்மதியை கொடுத்துள்ளது.

## லாஸ் ஏஞ்சல்ஸ் காட்டுத்தீ: உதவிக்கரம் நீட்டிய கனடா



வாஷிங்டன், ஜன.12

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணம், லாஸ் ஏஞ்சலிஸ் நகரைச் சுற்றிலும் காட்டுத் தீ கட்டுக்கடங்காமல் பரவி வருகிறது. பசிபிக் பாலிசேட்ஸ் பகுதியில் 19,000 ஏக்கர் நிலத்தையும், அல்டடேனா பகுதியில் 13,000 ஏக்கர் நிலத்தையும் காட்டுத்தீ எரித்துள்ளது.

வெஸ்ட்ஹில்ஸ்பகுதியிலும்பரவியகாட்டுத்தீசிலமணிநேரங்களுக்குள் 900 ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்பை தீக்கிரையாக்கியது. இதற்கிடையே, அமெரிக்காவில் ஏற்பட்டுள்ளகாட்டுத்தீயைஅணைக்கும் பணியில் கனடா தீயணைப்பு வீரர்களும் உதவி வருகின்றனர். கனடா அரசுக்கு சொந்தமான விமானம், அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள காட்டுத்தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் வீடியோவை ஜஸ்டின் ட்ரூடோ தனது எக்ஸ் தளத்தில் பகிர்ந்துள்ளார்.

# பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்கு கடும் தண்டனை சட்டத் திருத்த மசோதா தாக்கல் செய்கிறார்: மு.க.ஸ்டாலின்

சென்னை, ஜன.12

தமிழக சட்டசபை கடந்த 6ந்தேதி கூடியது. அன்று சபையில் கவர்னர் உரை வாசிக்கப்பட்டது.

கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதம் கடந்த 2 நாட்களாக நடந்தது. இன்று 3வது நாளாக விவாதம் தொடர்ந்தது. வினாக்கள்விடைகள் நேரத்தில் உறுப்பினர்கள் எழுப்பும் கேள்விகளுக்கு துறை சார்ந்த அமைச்சர்கள் பதில் அளித்து வருகின்றனர்.

துணை சபாநாயகர் பிச்சாண்டி எழுப்பிய கடல் மேல் பாலம் குறித்த கேள்விக்கு, சென்னை பகுதிகளில் உள்ள கடலில் பாலம் கட்ட முதற்கட்டமாக கலங்கரை விளக்கம் முதல் நீலாங்கரை வரை 15 கிலோமீட்டர் தூரத்திற்கு கடல் மேல் பாலம் கட்ட திட்ட அறிக்கையை தயாரிக்கும் பணியில் பொறியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். முதலமைச்சருடன் கலந்து பேசி இதில் நல்ல முடிவு எடுக்கப்படும் என பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு கூறினார்.



இதையடுத்து மற்றொரு உறுப்பினர் எழுப்பிய கேள்விக்கு, தூய்மை பணியாளர்களின் குடும்பங்களை எல்லாம் தொழில் முனைவோர்களாக மாற்றும் அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடி திட்டத்தை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது என்று அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

இவ்வாறு உறுப்பினர்கள் எழுப்பும் கேள்விகளுக்கு துறை சார்ந்த அமைச்சர்கள் பதில் அளித்து வருகின்றனர்.

வினாக்கள்விடைகள் நேரம் முடிந்தவுடன், பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்கான தண்டனையை கடுமையாக்கும் வகையில் சட்டத்திருத்த மசோதாவை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தாக்கல் செய்ய உள்ளார்.

# நீட் குறித்த விஜய்யின் விமர்சனத்திற்கு அமைச்சர் பதிலடி

சென்னை, ஜன.12

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் நீட் தேர்வைக் கண்டிப்பாக ரத்து செய்வோம் என்று பிரசாரம் செய்த தற்போதைய ஆட்சியாளர்கள், இப்போது, நீட் தேர்வை ரத்துசெய்யும் அதிகாரம் மத்திய அரசுக்கு மட்டுமே உள்ளது எனக்கூறி மக்களை ஏமாற்றி வருவதாக த.வெ.க. தலைவர் விஜய் விமர்சனம் செய்திருந்தார்.

விஜய்யின் இந்த விமர்சனத்துக்கு அமைச்சர் சிவசங்கர் பதிலடி கொடுத்துள்ளார். செய்தியாளர்களை சந்தித்த அவர், இது தொடர்பாக கூறியதாவது;

"நீட் தேர்வு ரத்து என்பது நீண்ட நெடிய போராட்டம். இது தமிழக மக்களுக்கும் தெரியும். கலைஞர் ஆட்சிக்காலத்திலும், ஜெயலலிதா ஆட்சிக்காலத்திலும் நீட் தேர்வு தடுத்து நிறுத்தப்பட்டது. அதன் பின்னர், ஓபிஎஸ், இபிஎஸ் ஆட்சி காலத்தில் தான் நீட் தேர்வு நடைமுறைக்கு வந்தது. நீட் தேர்வை எதிர்த்து திமுக தொடர்ந்து போராடிக்கொண்டு வருகிறது.




நீட் ரத்து என்பது மத்திய அரசை எதிர்த்து நடக்கும் போராட்டம். நீட் தேர்வை மத்திய அரசுதான் ரத்துசெய்ய முடியும். சட்டம், நாட்டின் நடைமுறை, அரசின் நடைமுறை புரிந்தால்தான் இதுகுறித்து பேசமுடியும். சினிமாவில் யாரோ எழுதிக்கொடுத்து பேசப்படும் பஞ்ச் வசனத்தை பேசும் சூழல் கிடையாது."

இவ்வாறு அவர் கூறினார்.

# தமிழ்நாடு பா.ஜ.க. தலைவரை தேர்வு செய்ய 17ம் தேதி சென்னை வருகிறார் கிஷன் ரெட்டி

சென்னை, ஜன.12

மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை உட்கட்சி தேர்தலை நடத்தும் பா.ஜ.க., மாநில தலைவரை தேசிய தலைமை மூலம் அறிவிக்கும். மத்திய மந்திரி எல்.முருகன் தமிழக பா.ஜ.க தலைவர் பதவியிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்பு, விருப்ப ஓய்வு பெற்ற ஐ.பி.எஸ் அதிகாரியான அண்ணாமலை தமிழக பா.ஜ.க. தலைவராக நியமிக்கப்பட்டார்.

அவரின் மூன்றாண்டு பதவிக்காலம் நிறைவடைய உள்ள நிலையில் புதிய தலைவர் தேசியத தலைமையால் இறுதி செய்யப்பட்டு இன்னும் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படவில்லை. இதற்கிடையே அடுத்த தலைவர் இவர் தான் என்று தமிழக பா.ஜ.க.வில் உள்ள ஒவ்வொரு கோஷ்டியினரும் யூகங்களை பரப்பி வருகிறார்கள்.

இந்த சூழலில் மதுரை பா.ஜ.க நிர்வாகிகள் சிலரால், மீண்டும் தமிழக பா.ஜ.க. தலைவராக அண்ணாமலை நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் வழி முழுவதும் தொண்டர்கள், பொதுமக்கள் உற்சாக வரவேற்பு என்றும் மதுரை மாநகர் முழுவதும் ஒட்டப்பட்டிருந்த போஸ்டர்கள் அனைவராலும் கவனிக்கப்பட்டன. அதே நேரம் பா.ஜ.க.வில் உள்ள பல்வேறு கோஷ்டிகளின் நிர்வாகிகள் மத்தியில் இது சலசலப்பை ஏற்படுத்தி இருந்தது.





இந்நிலையில் தமிழ்நாடு பா.ஜ.க. தலைவரை தேர்வு செய்ய, பா.ஜ.க. மேலிடப் பொறுப்பாளர் கிஷன் ரெட்டி வரும் 17ம் தேதி சென்னை வர உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இதனிடையே பா.ஜ.க. தலைவர் பெயர் பட்டியலில் அண்ணாமலை, வானதி சீனிவாசன் மற்றும் நயினார்நாகேந்திரன்பெயர்கள் முன்னிலையில் உள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொள்ளாச்சி சம்பவத்தில் முதல்அமைச்சர் சொன்னதில் தான் உண்மை உள்ளது சபாநாயகர் அப்பாவு

சென்னை, ஜன.12

பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை விவகாரம் தொடர்பாக சட்டசபையில் நேற்று நடந்த விவாதத்தின் போது ஆளும் கட்சி தரப்பினரும், அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களும் காரசாரமாக வார்த்தை மோதலில் ஈடுபட்டனர். இதேபோல் எதிர்க்கட்சி தலைவர்எடப்பாடி பழனிசாமி மற்றும் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் ஒருவருக்கொருவர் சராமாரியாக விமர்சனம் செய்தனர இந்த சூழலில் பொள்ளாச்சி பாலியல் சம்பவம் தொடர்பான ஆதாரங்களை சட்டசபையில் சபாநாயகரிடம் முதல்அமைச்சர் ஸ்டாலின் வழங்கினார். இவ்விவகாரத்தில், 12 நாட்கள் கழித்து தான் எப்.ஐ.ஆர். பதிவு செய்யப்பட்டது என சட்டசபையில் முதல் அமைச்சர் குற்றம்சாட்டி எடப்பாடி பழனிசாமிக்கு சவால் விடுத்திருந்த நிலையில், இதற்கான ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இதனிடையே பொள்ளாச்சி சம்பவம் குறித்து சட்டசபையில் அ.தி.மு.க. சார்பிலும் ஆதாரங்கள் சமர்பிக்கப்பட்டிருந்தன. இந்நிலையில் பொள்ளாச்சி சம்பவத்தில் முதல்அமைச்சர் சொன்னதில் தான் உண்மை உள்ளது என்று சபாநாயகர் அப்பாவு தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக சபாநாயகர் அப்பாவு கூறுகையில், "பொள்ளாச்சி சம்பவத்தில் முதல்அமைச்சர் மற்றும் அ.தி.மு.க. சார்பில் ஆவணங்கள் வழங்கப்பட்டன. பொள்ளாச்சி வழக்கில் தாமதமாக எப்.ஐ.ஆர்.பதிவு செய்யப்பட்டது என முதல்அமைச்சர் கூறியதே உண்மை. பாலியல் வன்கொடுமை நடந்து 12 நாட்களுக்கு பின்னரே எப்.ஐ.ஆர் பதிவு செய்யப்பட்டுள்ளது இரண்டு தரப்பு ஆதாரங்களையும் நான் பார்த்துவிட்டேன், நான் கூறும் தீர்ப்பு தான் இறுதியான தீர்ப்பு. இருவரும் இதோடு முடித்துக் கொள்ளுங்கள் என கூறியதால் முடித்துக் கொள்கிறேன்" என்று அவர் தெரிவித்தார். சபாநாயகரின் இந்த கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து அ.தி.மு.க.வினர் முழக்கமிட்டனர்.



நீலகிரி மாவட்டம் குன்னூரில் நகர திமுக சார்பில் சமத்துவ பொங்கல் விழா நகர செயலாளர் ராமசாமி தலைமையில் மாவட்ட செயலாளர் பா.மு.முபாரக் முன்னிலையில் கொண்டாடப்பட்டது இதில் சிறப்பு விருந்தினர்களாக மாநில பொறியாளர் அணி துணை அமைப்பாளர் பரமேஸ்குமார் மற்றும் மாநில விளையாட்டுத் துறை துணைச் செயலாளர் வாசிம் ராஜா,சிறுபான்மை பிரிவு மாநில துணைச் செயலாளர் அன்வர்கான் ஆகியோர் கலந்துகொண்டனர் மேலும் நிகழ்ச்சியில் குன்னூர் நகரமன்ற தலைவர் சுசீலா முருகேசன்,நகரமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் ஆகியோர் கலந்துகொண்டனர் நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் பா.மு. முபாரக் அனைவரையும் வரவேற்று சமத்துவ பொங்கல் விழா குறித்து பேசினார்.

தினகனி



# கோவளத்தில் ஹெலிகாப்டர் சவாரி மீண்டும் தொடக்கம் 5 நிமிடத்துக்கு ரூ.6 ஆயிரம் கட்டணம்



கோவளம், ஜன.12

செங்கல்பட்டு மாவட்டம் கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள கோவளத்தில் தனியார் நிறுவனம் மூலம் கடந்த 2023ம் ஆண்டு தீபாவளி திருநாளில் ஹெலிகாப்டர் சவாரி சுற்றுலா தொடங்கப்பட்டது. இதில் நபர் ஒருவருக்கு ரூ.6 ஆயிரம் கட்டணம் செலுத்தி 1,000 அடி உயரத்தில் பறந்து 5 நிமிடத்துக்கு கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள இயற்கை காட்சிகளை கழுகு பார்வையில் கண்டு களிக்கும் வகையில் ஹெலிகாப்டர் சுற்றுலா நடைபெற்று வந்தது.

பின்னர் திடீரென ஹெலிகாப்டர் சுற்றுலா சவாரி நிறத்தப்பட்டது.

மீண்டும் நேற்று ஹெலிகாப்டர் சுற்றுலா சவாரி தொடங்கியது. நேற்று முதல் நாளை (ஞாயிற்றுக்கிழமை) வரை 3 நாட்களும், மீண்டும் ஜனவரி 17, 18, 19 ஆகிய தேதிகளில் 6 நாட்களுக்கு ஹெலிகாப்டர் சவாரி நடக்கிறது. நேற்று ஆன்லைனில் ரூ.6 ஆயிரம் கட்டணம் செலுத்தி முன் பதிவு செய்தவர்கள் பலர் ஆர்வமாக கிழக்கு கடற்கரை சாலையில் ஹெலிகாப்டரில் வானில் பறந்து அழகிய கடற்கரை, பக்கிங்காம் கால்வாய், பழைய மாமல்லபுரம் சாலையின் அழகிய வானுயர்ந்த கட்டிடங்கள் மற்றும் இயற்கை காட்சிகளை கழுகு பார்வையில் வானில் வட்டமடித்தபடியே ஆர்வமாக பார்த்து ரசித்தனர். ஹெலிகாப்டர் சவாரி கோவளத்தில் ஆரம்பித்து முட்டுக்காடு, நெம்மேலி, வடநெம்மேலி, பட்டிகுளம் வரை சென்று விட்டு மீண்டும் கோவளத்தை வந்தடையும்.

முன்னதாக ஆன்லைனில் டிக்கெட் பதிவு செய்தவர்கள் ஹெலிகாப்டர் சவாரி கோவளம் ஹெலிபேடில் வந்து காத்திருந்தனர். ஆனால் தாம்பரம் விமானப்படை தளத்தில் இருந்து சரியான சிக்னல் கிடைக்காததால் பல மணி நேரம் காத்திருந்து சுற்றுலா பயணிகள் உல்லாசமாக ஹெலிகாப்டர் சவாரி செய்து மகிழ்ந்தனர்.

முன்னதாக ஹெலிகாப்டர் சவாரி செய்தவர்களுக்கு ஆதார் அட்டைகள் நகல் பெறப்பட்டு சவாரி செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

# அம்ரித் பாரத் ரெயில் பெட்டிகளை ஆய்வு செய்தார் ரெயில்வே அமைச்சர்



சென்னை, ஜன.12

சென்னை ஐசிஎஃப்பில் தயாரிக்கப்பட்டு வரும் அம்ரித் பாரத் 2.0 படுக்கை வசதி கொண்ட ரெயில் பெட்டிகளை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் இன்று ஆய்வு செய்தார்.

அதைத்தொடர்ந்து செய்தியாளரிடம் அவர் கூறியதாவது:

நாடு முழுவதும் ரெயில் போக்குவரத்தை மேம்படுத்த மத்திய அரசு சார்பில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அந்த வகையில் தமிழகத்துக்கு ரெயில்வே துறை சார்பில் செயல்படுத்தப்படும் புதிய திட்டங்களுக்கு மாநில அரசு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

ஏழை எளிய மக்களும் வந்தே பாரத் ரெயில்களில் பயணிக்கும் அனுபவத்தை பெற வேண்டும் என்ற நோக்கத்திற்காக குறைந்த கட்டணத்தில் அம்ரித் பாரத் ரெயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

இதற்கு மக்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்து வரும் நிலையில், தற்போது படுக்கை வசதி கொண்ட அம்ரித் ரெயில் பெட்டிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு ரெயில் பெட்டிகளும் தயாரிக்கப்பட்டு அனைத்து சோதனைகளும் நிறைவடைய குறைந்தபட்சம் மூன்று மாதங்களாவது ஆகும்.

அந்த வகையில் அடுத்த இரண்டு ஆண்டுகளில் 50 அம்ரித் ரெயில்களை மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வர திட்டமிட்டுள்ளோம் என்று கூறினார்.

# தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை மத்திய பா.ஜ.க. அரசு முடக்குகிறது செல்வப்பெருந்தகை கண்டனம்



சென்னை, ஜன.12

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

முன்னாள் பிரதமர் மறைந்த மன்மோகன்சிங் ஆட்சியில் பல்வேறு புரட்சிகரமான மக்கள் நலன் சார்ந்த பல்வேறு திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டன. அத்திட்டங்கள் 10 ஆண்டுகால ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் மிகச் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டன. அப்படி சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டம், உணவு பெறுகிற உரிமைச் சட்டம் ஆகிய இரண்டும் தற்போது பிரதமர் மோடி ஆட்சியில் முடக்கப்பட்டு, செயலற்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் 10 ஆண்டுகால ஆட்சியில் தகவல் கேட்டு 1 கோடியே 75 லட்சம் மனுக்கள் குவிந்து அதற்கு பதில் வழங்கப்பட்டிருக்கிறது. தற்போது கிடைத்த தகவலின்படி, தலைமை தகவல் ஆணையத்தில் 8 தகவல் ஆணையர்களின் பதவி நீண்டகாலமாக நிரப்பப்படாமல் இருக்கின்றன. இதனால் 23,000 மேல்முறையீட்டு மனுக்கள் நிலுவையில் உள்ளன.

இதுகுறித்து தொடுக்கப்பட்ட வழக்கில், சுப்ரீம் கோர்ட்டு 8 தகவல் ஆணையர்களின் பதவிகளை உடனடியாக நிரப்பவேண்டும் என்று ஆணையிட்டும், அவை நிரப்பப்படாமல் காலம் தாழ்த்தப்பட்டு வருகின்றன. அரசு நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை வர வேண்டும், அரசு நிர்வாகத்தில் நடப்பதை அனைத்து குடிமக்களும் அறிந்து கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தில் மன்மோகன்சிங் ஆட்சியில் கொண்டுவந்த தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை மத்திய பா.ஜ.க. அரசு முடக்குவதை வன்மையாக கண்டிக்கிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# குன்னூர் மலைப்பாதையில் 300 அடி பள்ளத்தில் விழுந்து பெண் யானை உயிரிழப்பு



குன்னூர், ஜன.12

நீலகிரி மாவட்டம் குன்னூர் மேட்டுப்பாளையம் மலைப்பாதையில் காட்டு யானைகள் அதிக அளவில் நடமாடி வருகிறது.

இந்தநிலையில் இன்று காலை மேட்டுப்பாளையம் மலைப்பாதையில் 6வது கொண்டை ஊசி வளைவு அருகே பெண் யானை ஒன்று சென்று கொண்டிருந்தது. அந்த யானை திடீரென பாறை சறுக்கி மலையில் இருந்து 300 அடி பள்ளத்தில் உருண்டு விழுந்தது. அதனுடன் பாறைகளும், கற்களும் சேர்ந்து விழுந்ததால் யானை படுகாயம் அடைந்தது.

இதுகுறித்து தகவல் அறிந்த குன்னூர் வனச்சரகர் ரவிந்திரநாத் தலைமையிலான வனக்குழுவினர் விரைந்து சென்று சிகிச்சை அளித்தனர். அதற்குள் யானை பரிதாபமாக உயிரிழந்தது.

இதையடுத்து வனவிலங்கு மருத்துவக்குழுவினர் நேரில் சென்று அந்த இடத்திலேயே யானையின் உடலை பிரேத பரிசோதனை செய்தனர். பலியான யானையுடன் மேலும் சில யானைகள் இருந்துள்ளன. யானை பள்ளத்தில் விழுந்து இறந்ததும் மற்ற யானைகள் தூரத்தில் நின்றபடி வேதனையுடன் பார்த்துள்ளன. இதனால் அந்த யானைகள் தங்களை தாக்கி விடக்கூடாது என்பதற்காக வனத்துறையினர் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர்.

# உப்பாறு அணையில் இருந்து தண்ணீர் திறக்க தமிழக அரசு உத்தரவு



திருப்பூர், ஜன.12


தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டத்தில் உள்ள உப்பாறு அணையிலிருந்து வலது மற்றும் இடது கால்வாய் மூலம் பாசனம் பெறும் நிலங்களில், நிலையில் உள்ள பயிர்களைக் காப்பாற்றும் பொருட்டும், பொதுமக்கள் மற்றும் கால்நடைகளின் குடிநீர் தேவைக்காகவும், 19.01.2025 முதல் 25.01.2025 முடிய 7 நாட்களுக்கு மொத்தம் 110.07 மில்லியன் கன அடிக்கு மிகாமல் தண்ணீர் திறந்து விட அரசு ஆணையிட்டுள்ளது.

இதனால், திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டத்திலுள்ள வேலாயுதம்பாளையம், கெத்தல்ரேவ், தொப்பம்பட்டி, நஞ்சியம்பாளையம், சூரியநல்லூர், கண்ணன் கோவில், மடத்துப்பாளையம், வரப்பாளையம், வடுகபாளையம் மற்றும் சின்னப்புத்தூர் ஆகிய கிராமங்களிலுள்ள 6060 ஏக்கர் நிலங்கள் பாசன வசதிபெறும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அமைச்சர் மா.சுப்பிரமணியன் விடுதலை 22 ஆண்டுகள் நடந்த வழக்கில் தீர்ப்பு



சென்னை, ஜன.12

சென்னை மாநகராட்சி மாமன்ற கூட்டம் கடந்த 2002ம் ஆண்டு துணைமேயர் கராத்தே தியாகராஜன் தலைமையில் நடந்தது.

அப்போது எதிர்கட்சியாக இருந்த இருந்த தி.மு.க. உறுப்பினர்கள், சென்னை கண்ணப்பன் திடல் மீன்அங்காடி டெண்டர்தொடர்பாகபிரச்சினை எழுப்பினர். அப்போது ஆளும் அ.தி.மு.க. உறுப்பினர்களுக்கும், தி.மு.க. உறுப்பினர்களுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

இதனை தொடர்ந்து தி.மு.க. உறுப்பினர்கள் மைக், பிளாஸ்டிக் நாற்காலி உள்ளிட்ட பொருள்களை கொண்டு அ.தி.மு.க. உறுப்பினர்களை தாக்கியதாகவும், இதில் அ.தி.மு.க. மாமன்ற உறுப்பினர்களாக இருந்த ஜீவரத்தினம், பரிமளா, மங்கையர்கரசி, குமாரி, உள்ளிட்ட பலருக்கு தலை, கை, கால் உள்ளிட்ட இடங்களில் காயம் ஏற்பட்டதாகவும் குற்றம் சாட்டப்பட்டது.

இது தொடர்பாக அ.தி.மு.க. மன்ற உறுப்பினர்கள் சுகுமார் பாபு மற்றும் மாநகராட்சி மன்ற செயலாளர் ரீட்டா ஆகியோர் சென்னை பெரியமேடு போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தனர். இந்த புகாரின் அடிப்படையில், தற்போது அமைச்சராக இருக்கும் முன்னாள் கவுன்சிலர் மா.சுப்பிரமணியன், முன்னாள் கவுன்சிலர்கள் வி.எஸ்.பாபு, சிவாஜி, தமிழ்வேந்தன், நெடுமாறன், செல்வி சவுந்தர்யா, கிருஷ்ணகிரி மூர்த்தி ஆகிய 7 பேருக்கு எதிராக 2 வழக்குகள் பதிவு செய்யப்பட்டது.

கலகம் செய்யும் நோக்கில் சட்டவிரோதமாக கூடுதல், சட்டவிரோதமாக ஒருவரை தடுத்து வைத்தல், ஆயுதங்களை கொண்டு தாக்குதல், கொலை மிரட்டல், பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல் உள்ளிட்ட சட்டப்பிரிவுகளில் வழக்கு பதிவு செய்தது.

பல ஆண்டுகளாக நிலுவையில் இருந்த வழக்கில் கடந்த 2019ம் ஆண்டு காவல்துறையால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

பின்னர் இந்த வழக்கின் விசாரணை சென்னையில் உள்ள எம்.பி., மற்றும் எம்.எல்.ஏ.க்கள் மீதான குற்ற வழக்குகளை விசாரிக்கும் கூடுதல் சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஜி.ஜெயவேல் முன்பு விசாரணை நடைபெற்றது. போலீஸ் தரப்பில் 70க்கும் மேற்பட்ட சாட்சிகளிடம் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை நடைபெற்றது. இதில் சிலர் பிறழ் சாட்சிகளாகவும் மாறினர்.

அனைத்து தரப்பு வாதங்களும் நிறைவடைந்த நிலையில் வழக்கின் தீர்ப்பை நீதிபதி ஜெயவேல் இன்று வழங்கினார். அமைச்சர் மா.சுப்பிரமணியன் உள்பட 7 பேரையும் விடுதலை செய்து நீதிபதி உத்தரவிட்டார்.

# குலசேகரன்பட்டினத்தில் கடல் அரிப்பு மக்கள் அதிர்ச்சி



குலசேகரன்பட்டினம், ஜன.12


திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் பகுதியில் கடந்த சில நாட்களாக கடல் அரிப்பு அதிகரித்து வருகிறது. கோவிலில் இருந்து கடற்கரைக்கு செல்லும் வழியில் சுமார் 200 அடி தூரத்துக்கு 8 அடி ஆழத்துக்கும் அதிகமாக அரித்து சென்றது. அங்கு பாறைகள் தென்படுவதால் அவற்றில் நின்று புனித நீராடும் பக்தர்கள் அவதிப்படுகின்றனர்.

இந்த நிலையில் திருச்செந்தூர் குலசேகரன்பட்டினம் இடையிலும் கடல் அரிப்பு ஏற்பட்டுள்ளது. குலசேகரன்பட்டினம் வடக்கூரை அடுத்த காட்டு பகுதியில் கடற்கரையில் இருந்த 10க்கும் மேற்பட்ட பனை மரங்களை கடல் அலைகள் வாரி சுருட்டின. சரிந்த சில பனை மரங்களை கடல் அலைகள் இழுத்து சென்றன. மேலும் சில பனை மரங்கள் சரிந்து விழும் நிலையில் உள்ளன.

குலசேகரன்பட்டினத்தில் கடல் அரிப்பு ஏற்பட்ட பகுதியில் கடற்கரையோரத்தில் நூற்றுக்கணக்கான பனை மரங்கள் உள்ளன. இவைகளும் கடல் அரிப்பால் சரிந்து விழும் அபாய நிலையில் உள்ளன. இதனால் அப்பகுதி மக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். மேலும் கடல் அரிப்பை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

# கழிவுநீர் தொட்டியில் விழுந்து சிறுமி உயிரிழப்பு: பள்ளி தாளாளர், முதல்வருக்கு நிபந்தனை ஜாமின்





சென்னை, ஜன.12

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டியில் உள்ள தனியார் மேல்நிலைப் பள்ளியில் கழிவறைக்குச் சென்ற எல்.கே.ஜி. மாணவி கழிப்பிட தொட்டியில் விழுந்து உயிரிழந்தது தொடர்பாக அவரது தந்தை புகார் அளித்தார்.

இந்த புகாரின் அடிப்படையில், சந்தேகம் மரணம், பணியில் அஜாக்கிரதையாக இருப்பது ஆகிய பிரிவின் கீழ் வழக்குப் பதிவு செய்த போலீசார் பள்ளி தாளாளர் எமில்டா, முதல்வர் டோம்னிக் மேரி, வகுப்பு ஆசிரியர் ஏஞ்சல், ஆகிய மூவரையும் கைது செய்தனர்.

இந்த வழக்கில் ஜாமின் கோரி மூவரும் தாக்கல் செய்த மனு நீதிபதி ஏ.டி. ஜெகதீஷ் சந்திரா முன்பு விசாரணைக்கு வந்த போது, மனுதாரர்கள் தரப்பில் விழுப்புரத்தில் பெய்த கனமழையின் காரணமாக தொட்டி பராமரிக்கப்படாமல் இருந்ததால் குழந்தை வழி மாறி சென்றதன் காரணமாக இந்த நிகழ்வு நடந்ததாக தெரிவிக்கப்பட்டது.

வழக்கு விசாரணை நடைபெற்று வருவதால் ஜாமின் வழங்கக்கூடாது என காவல்துறை தரப்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, பள்ளியின் தாளாளர், முதல்வர், வகுப்பு ஆசிரியர் ஆகிய 3 பேருக்கும் நிபந்தனை ஜாமின் வழங்கிய நீதிபதி, மூவரும் சென்னையில் ஒரு வாரம் தங்கி இருந்து மயிலாப்பூர் காவல் நிலையத்தில் கையெழுத்திட உத்தரவிட்டார்.

மேலும், பள்ளியின் தாளாளர் மற்றும் முதல்வர் பாதிக்கப்பட்ட சிறுமியின் குடும்பத்துக்கு 5 லட்சம் ரூபாய் வழங்க நீதிபதி உத்தரவிட்டார்.

# த.வெ.க. வியூக வகுப்பாளர் ஆடியோ சர்ச்சை: கட்சி நிர்வாகிகளிடம் புஸ்ஸி ஆனந்த் விளக்கம்



சென்னை, ஜன.12

தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் மாவட்ட பொறுப்பாளர்கள் கூட்டம் பனையூரில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர்களை தேர்வு செய்வதற்கான இந்த மாவட்ட பொறுப்பாளர்கள் கூட்டத்தின்போது வியூக வகுப்பாளர் ஜான் ஆரோக்கிய சாமி பேசிய ஆடியோ சர்ச்சையானது தொடர்பாக நிர்வாகிகளுக்கு விளக்கம் அளித்து அறிவுரை வழங்கியுள்ளார்.

அப்போது புஸ்ஸி ஆனந்த் "சமூக ஊடகங்கள் வாயிலாக பரப்பப்படும் அவதூறுகளை யாரும் நம்ப வேண்டாம். காழ்புணர்ச்சியால் பரப்பப்படும் குற்றச்சாட்டுகளை கண்டு உணர்ச்சிவசப் படக்கூடாது" எனத் தெரிவித்துள்ளார்.

தமிழக வெற்றிக் கழகத்தில் விஜயைவிட தன்னை முன்னிலைப்படுத்த புஸ்ஸி ஆனந்த் முயற்சிப்பதாக ஜான் ஆரோக்கியசாமி பேசிய வீடியோ சமூக வலைத்தளங்களில் பரவி சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. இதற்கு புஸ்ஸி ஆனந்த்விளக்கம்அளித்து, அறிவுரை வழங்கியுள்ளார்.

# ஆளுநர் ஆர்.என். ரவியுடன் தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் சந்திப்பு



சென்னை, ஜன.12

தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த், கட்சித் தலைவர்களுடன் ஆளுநர் மாளிகையில் ஆளுநர் ஆர்.என். ரவியை சந்தித்தனர். அப்போது "அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கு உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து கோரிக்கை மனு" அளித்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

# மின்வாரிய ஊழல்கள் குறித்து விசாரணை நடத்த வேண்டும்: அன்புமணி ராமதாஸ்

சென்னை, ஜன.12

பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

202324 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மின்சார வாரியம் ரூ.4435 கோடி இழப்பை சந்தித்து இருப்பதாக வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சி அளிக்கின்றன. தமிழ்நாட்டில் கடந்த மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட்டு வரும் நிலையில் மின்சார வாரியம் லாபம் ஈட்டும் நிலையை எட்டாதது ஏன்? என்ற வினா தமிழ்நாட்டு மக்களின் மனங்களில் எதிரொலிக்கிறது.

தமிழ்நாட்டில் மின்சார கட்டணம் உயர்த்தப்படுவதற்கு முன் கடந்த 2021 22 ஆம் ஆண்டில் மின்சார வாரியத்தின் வருவாய் சுமார் ரூ.54,000 கோடியாக இருந்தது. அப்போது மின்சார வாரியத்தின் இழப்பு சுமார் ரூ.9 ஆயிரம் கோடி இருந்தது. 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் மின் கட்டணம் 30% விழுக்காடுக்கு மேலாக உயர்த்தப்பட்டதன் காரணமாக ஆண்டுக்கு சுமார் ரூ.31,500 கோடி கூடுதல் வருவாய் கிடைத்தது. அதன்படி பார்த்தால் 2022 23 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மின்சார வாரியம் சுமார் ரூ.15,000 கோடி லாபம் ஈட்டியிருக்க வேண்டும். ஆனால் அந்த ஆண்டில் மின்சார வாரியம் சுமார் ரூ.10,000 கோடி இழப்பை எதிர்கொண்டது.

202324 ஆம் ஆண்டில் வணிக இணைப்புகளுக்கு மட்டும் 2.18% விழுக்காடு மின் கட்டணம் உயர்த்தப்பட்டது.

அதன் காரணமாக அந்த ஆண்டில் மின்சார வாரியத்தின் வருவாய் ரூ.98,863 கோடியாக அதிகரித்திருந்தது. இது 2021 22 ஆம் ஆண்டின் வருவாயைவிட சுமார் ரூ.40,000 கோடி அதிகமாகும். அதனால் அந்த ஆண்டிலாவது மின்சார வாரியம் இழப்புகளை தவிர்த்து லாபம் ஈட்டி இருக்க வேண்டும். ஆனால் மின்சார வாரியத்



தின் இழப்பு ரூ.4435 கோடியாக குறைந்து இருக்கிறதே தவிர, லாபம் ஈட்ட முடியவில்லை.

ஆண்டுக்காண்டு மின்சார கட்டணம் உயர்த்தப்படும் போதிலும், மின்சார வாரியம் தொடர்ந்து இழப்பை எதிர்கொண்டு வருவதற்கு காரணம், அதில் நடைபெறும் ஊழல்களும், நிர்வாக சீர்கேடுகளும் தான் என்று வல்லுனர்கள் கூறுகின்றனர். தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த மின் தேவையில் மூன்றில் இரண்டு பங்குக்கும் கூடுதலான அளவு தனியாரிடமிருந்தும், மத்திய தொகுப்பிலிருந்தும் தான் வாங்கப்படுகிறது. இதற்காக தரப்படும் விலை தமிழ்நாடு மின்சார வாரியம் சொந்தமாக மின் உற்பத்தி செய்வதற்கு ஆகும் செலவைவிட பலமடங்கு ஆகும். தமிழக ஆட்சியாளர்கள் தமிழ்நாட்டில் சொந்த மின் உற்பத்தியை அதிகரிக்காமல், தனியாரிடமிருந்து அதிக விலைக்கு மின்சாரம் வாங்குவதற்கான காரணம் என்னவென்பது அனைவரும் அறிந்ததே.

தமிழ்நாட்டு மக்கள் மீது கடந்த மூன்று ஆண்டுகளாக மின் கட்டண உயர்வு சுமத்தப்பட்டு இருக்கும் நிலையில், மின்சார வாரியம் தொடர்ந்து நஷ்டத்தில் இயங்குவதை ஏற்றுக்கொள்ள முடியாது. மின் கட்டணம் உயர்த்தப்பட்ட பிறகும் மின்சார வாரியம் தொடர்ந்து நஷ்டத்தில் இயங்குவது ஏன்? என்பது குறித்து விசாரணை நடத்த ஆணையிட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# 15ந்தேதி இறைச்சி கூடங்கள் மூடல்: சென்னை மாநகராட்சி அறிவிப்பு



சென்னை, ஜன.12

சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு வரும் 15 ந்தேதி, சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் இயங்கும் புளியந்தோப்பு, வில்லிவாக்கம், சைதாப்பேட்டை மற்றும் கள்ளிக்குப்பம் ஆகிய இறைச்சிக் கூடங்கள் அரசு உத்தரவின்படி மூடப்படவுள்ளன. எனவே, இறைச்சி கடை வியாபாரிகள், பொதுமக்கள் அனைவரும் இந்த உத்தரவினை செயல்படுத்த முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப் பட்டுள்ளது.

# புகையில்லா போகி பண்டிகை கொண்டாடுவோம் மக்களுக்கு மாசு கட்டுப்பாட்டு வாரியம் வேண்டுகோள்

சென்னை, ஜன.12

தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

நமது முன்னோர்கள் பொங்கல் திருநாளுக்கு முன் பழையன கழிதலும், புதியன புகுதலும் என்ற அடிப்படையில் போகி பண்டிகையினை கொண்டாடி வந்துள்ளனர். இயற்கை பொருட்களில் இருந்து தயாரிக்கப்பட்ட பழைய பொருட்களை தீயிட்டு கொளுத்தி வந்துள்ளனர். இச்செய்கையால் காற்று மாசுபடாமல் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாமல் இருந்து வந்தது.



தற்போது போகி பண்டிகையின்போது பழைய பொருட்களான பிளாஸ்டிக், செயற்கை இழைகளால் தயாரிக்கப்பட்ட துணிகள், ரப்பர் பொருட்கள், பழைய டயர் மற்றும் டியூப், காகிதம், ரசாயனம் கலந்த பொருட்கள் போன்றவற்றை எரிப்பதால் காற்று மாசு ஏற்படுகிறது.

இது மட்டுமல்லாமல் அடர்ந்த புகையின் காரணமாக விமானங்கள் வருகை மற்றும் புறப்பாடுகளில் தாமதம் ஏற்படுகிறது. புகை மண்டலம் ஏற்பட்டு வாகன ஓட்டிகளுக்கு மிகுந்த சிரமங்கள் ஏற்படுவதோடு விபத்துகளுக்கும் காரணமாக உள்ளது. நச்சு வாயுக்களால் பொதுமக்களுக்கு மூச்சுத்திணறல், கண் எரிச்சல் போன்ற பாதிப்பு ஏற்படுகிறது.

மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் விழிப்புணர்வு பிரசாரத்தை தொடர்ந்து பழைய பொருட்களை எரிப்பது பெரும்பாலும் குறைந்துள்ளது. எனவே, இந்த ஆண்டும் பொதுமக்கள் அனைவரும் பிளாஸ்டிக், டயர், டியூப் போன்றவற்றை எரிக்காமல் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் போகி பண்டிகையை கொண்டாட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அதில் கூறப் பட்டுள்ளது.

# கொடைக்கானலுக்கு இஸ்ரேல் நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிப்பு

கொடைக்கானல், ஜன.12

மலைகளின் இளவரசியான கொடைக்கானலில் நிலவும் தட்பவெப்ப நிலை வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவர்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. மேலும் இங்குள்ள வட்டகானல் பகுதியில் டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் இஸ்ரேலிய நாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிக அளவு வருகை தருவார்கள்.

இங்கு நிலவும் இதமான கால நிலையை ரசிக்கவும், ஓய்வெடுக்கவும் வருகை புரியும் இவர்கள் மொத்தமாக கூடி சபாத் என்னும் சிறப்பு வழிபாடு வார வெள்ளிக்கிழமைகளில் நடத்துவார்கள்.

இந்நிலையில் கடந்த 2016ம் ஆண்டு ஐ.எஸ்.ஐ.எஸ்.



தீவிரவாதிகள் இங்கு வார வழிபாட்டில் கூடும் இஸ்ரேல் சுற்றுலாப் பயணிகளை தாக்க திட்டமிட்டிருந்ததும், மேலும் கொடைக்கானல் மலைப்பகுதிகளுக்கும் அச்சுறுத்தல் இருந்தாலும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து வட்டக்கானல் பகுதியில் சோதனைச் சாவடி அமைத்து துப்பாக்கி ஏந்திய போலீசார் 24 மணிநேரமும் கண்காணித்து வந்தனர்.

கடந்த சில மாதங்களாக இஸ்ரேலில் போர் நடைபெற்றதால் அந்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை இல்லாமல் இருந்தது. தற்போது கொடைக்கானல் வட்ட கானல் பகுதிக்கு இஸ்ரேல் நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

ஆனால் வழக்கமாக இந்த பகுதியில் அமைக்கப்பட்டுள்ள காவல்துறை சோதனைச் சாவடி செயல்படாமல் உள்ளது. மேலும் கண்காணிப்பு கேமராக்களும் செயல் இழந்து பயன்பாடற்ற நிலையில் உள்ளது.

இஸ்ரேல் நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையை கருத்தில் கொண்டு போலீசார் சோதனைச் சாவடி மற்றும் கண்காணிப்பு கேமராக்களை செயல்பாட்டிற்கு கொண்டு வரவும், பாதுகாப்பை பலப்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வியாபாரிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தி உள்ளனர்.

# ஆளுநர் மாளிகையில் பொங்கல் விழா பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளுடன் கொண்டாட்டம்



சென்னை, ஜன.12

தமிழக ஆளுநர் மாளிகையில் பொங்கல் விழா நேற்று கொண்டாடப்பட்டது. அதற்காக ஆளுநர் மாளிகை வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு இருந்தது. மிகப் பெரிய பானையில் பொங்கல் பொங்குவது போன்றும், அதன் அருகில் மாட்டு வண்டி மற்றும் வைக்கோல் போர் வைக்கப்பட்டு நமது பராம்பரியத்தை பறை சாற்றியது.

3 மண்பானைகளில் பொங்கல் வைக்கும் நிகழ்ச்சி நடந்தது. வேட்டி சட்டை அணிந்தபடி ஆளுநர் ஆர்.என். ரவி, அவரது மனைவி லட்சுமி ரவி மற்றும் குடும்பத்தினர் கலந்து கொண்டு பொங்கலிட்டனர். பானையில் அரிசி, வெல்லம் போட்டு அதனை கரும்பு மூலம் கிளறி பொங்கல் வைத்தனர்.

பின்னர் கலை நிகழ்ச்சிகள் நடந்தன. அதில் முன்னாள் ஆளுநர் தமிழிசை சவுந்திரராஜன் உள்பட பலர் கலந்து கொண்டனர். அதற்காக அரங்கத்திற்கு வந்த ஆளுநர் ஆர்.என்.ரவி, ஒவ்வொருவரின் இருக்கைக்கும் சென்று கையெடுத்து கும்பிட்டு பொங்கல் வாழ்த்துகள் என்று தமிழில் கூறினார்.

அதனைத்தொடர்ந்து மதுரை கிராமிய கலைகள் மையம் சார்பாக பாரம்பரிய கலைநிகழ்ச்சிகள் நடந்தன. முதலில் நாதஸ்வரம் நிகழ்ச்சியும், தொடர்ந்து காவடியாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், நாட்டுப்புற பாடல், கரகாட்டம், காளியாட்டம், பெரிய மேளம் ஆகிய நிகழ்ச்சிகள் நடந்தது. இறுதியாக சோழர்களின் காலத்தில் இசைக்கப்பட்ட வாத்திய கருவிகளுடன் கைலாய வாத்தியம் நடந்தது.

அதன்பின்னர் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் பொங்கல் இரவு விருந்து அளிக்கப்பட்டது.

# சீர்காழி அருகே சர்க்கரை ஆலை அதிகாரி வீட்டில் 150 பவுன் நகைகள், வெள்ளி பொருட்கள் கொள்ளை

சீர்காழி, ஜன.12

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி அடுத்துள்ள மங்கைமடம் நெருஞ்சி கொல்லை தெருவை சேர்ந்தவர் செல்வேந்திரன் (வயது 60). இவர் சேத்தியாத்தோப்பு பகுதியில் உள்ள தனியார் சர்க்கரை ஆலையில் ரசாயன தலைமை என்ஜினீயராக பணியாற்றி வருகிறார்.

இந்நிலையில் இவர் கடந்த 6ந்தேதி வீட்டை பூட்டிவிட்டு குடும்பத்துடன் வெளியூர் சென்றுள்ளார். பின்னர், அனைவரும் நேற்று சொந்த ஊர் திரும்பி உள்ளனர். அப்போது அவர்கள் வீட்டிற்கு வந்து பார்த்தபோது வீட்டின் முன்பக்க கதவின் பூட்டு உடைக்கப்பட்டு இருந்தது. இதனை கண்டவர்



கள் அதிர்ச்சி அடைந்தனர்.

பின்னர், வீட்டின் உள்ளே சென்று பார்த்தபோது பீரோ உடைக்கப்பட்டு, அதில் இருந்த சுமார் 150 பவுன் தங்க நகைகள், ½ கிலோ வெள்ளி பொருட்கள் மற்றும் ரூ.80 ஆயிரம் ரொக்கம் ஆகியவை கொள்ளை போனது தெரியவந்தது. இதனை கண்ட செல்வேந்திரன் மிகுந்த வேதனை அடைந்தார்.

பின்னர், உடனடியாக இதுகுறித்து செல்வேந்திரன் திருவெண்காடு போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். இதனைத் தொடர்ந்து, விரைந்து வந்த சீர்காழி துணை போலீஸ் சூப்பிரண்டு ராஜ்குமார், இன்ஸ்பெக்டர் (பொ) விஜயா மற்றும் போலீசார் சம்பவ இடத்தில் ஆய்வு செய்தனர். மேலும், கைரேகை நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு, வீட்டில் பதிவான தடயங்களை சேகரித்து வருகின்றனர்.

மேலும், இதுகுறித்து போலீசார் வழக்குபதிவு செய்து விசாரணையை தீவிரப்படுத்தி மர்மநபர்களை வலைவீசி தேடி வருகின்றனர். வீட்டின் பூட்டை உடைத்து தங்க நகைகள், வெள்ளி பொருட்கள் கொள்ளை அடிக்கப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# திருவண்ணாமலையில் பவுர்ணமி கிரிவலம் செல்ல உகந்த நேரம்



திருவண்ணாமலை, ஜன.12

திருவண்ணாமலையில் உள்ள மகா தீப மலையை பவுர்ணமி நாளில் பக்தர்கள் கிரிவலம் சென்று வழிபடுகின்றனர். அதன்படி, மார்கழி மாத பவுர்ணமி வருகிற 13ந்தேதி அதிகாலை 5.29 மணிக்கு தொடங்கி, மறுநாள் (14ந்தேதி) அதிகாலை 4.46 மணிக்கு நிறைவு பெறுகிறது. அந்த நேரத்தில் பவுர்ணமி கிரிவலம் செல்ல உகந்த நேரம் என அருணாசலேஸ்வரர் கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

மேலும், ஆருத்ரா தரிசன வழிபாடும் 13 ந்தேதி நடைபெற உள்ளது. அப்போது மகா தீபம் ஏற்றப்பட்ட கொப்பரையில் சேகரிக்கப்பட்ட மகா தீப மை நடராஜருக்கு சாத்தப்பட்டு சிறப்பு பூஜை நடைபெறும். அதன்பிறகு பக்தர்களுக்கு வழங்கப்படும்.

பவுர்ணமி மற்றும் ஆருத்ரா தரிசனத்தை முன்னிட்டு, திருவண்ணாமலைக்கு சிறப்பு பஸ், ரெயில்கள் இயக்கப்பட உள்ளது.

# ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல்: 247வது முறையாக பத்மராஜன் வேட்புமனு தாக்கல்

ஈரோடு, ஜன.12

ஈரோடு கிழக்கு தொகுதிக்கான இடைத்தேர்தல் வரும் பிப்ரவரி 5ந் தேதி நடைபெற உள்ளது. இதற்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கி வருகின்ற 17ந் தேதி வரை நடைபெற உள்ளது. தொடர்ந்து, விடுமுறை நாட்கள் தவிர மீதமுள்ள 13, 17ந் தேதிகளில் என மொத்தம் 3 நாட்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் நடைபெறும்.

இதையடுத்து 18ந் தேதி வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை நடைபெறுகிறது. 20ந் தேதி வேட்புமனுக்கள் வாபஸ் பெற கடைசி நாளாகும். அன்று மாலை இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும்.

தொடர்ந்து பிப்ரவரி 5ந் தேதி வாக்குப்பதிவு நடைபெறுகிறது. 8ந் தேதி சித்தோட்டில் உள்ள அரசு பொறியியல் கல்லூரியில் வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது.

இந்த நிலையில் தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பின்படி இன்று வேட்புமனுத் தாக்கல் தொடங்கியது. தி.மு.க. உள்ளிட்ட பிரதான கட்சிகள் வேட்பாளரை அறிவிக்காத நிலையில், சுயேட்சை வேட்பாளர்கள் சிலர் மட்டும் இன்று வேட்பு மனு தாக்கல் செய்ய வந்தனர்.

முதல் நபராக தேர்தல் மன்னன் சேலம் மாவட்டம் மேட்டூரை சேர்ந்த பத்மராஜன் (64) என்பவர் ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிட மனு தாக்கல் செய்தார்.



நான் இதுவரை 246 தேர்தலில் போட்டியிட்டுள்ளேன். தற்போது ஈரோடு கிழக்கு தொகுதியில் போட்டியிடுவதற்காக இன்று வேட்புமனு தாக்கல் செய்துள்ளேன். இது 247வது தேர்தலாகும்.

நான் இதுவரை 6 ஜனாதிபதி தேர்தல், 6 துணை ஜனாதிபதி தேர்தல், 33 பாராளுமன்றத் தேர்தல், 76 எம்.எல்.ஏ.க்கள் தேர்தல், மாநகராட்சி மேயர் தேர்தல், கவுன்சிலர் தேர்தல் என போட்டிட்டு உள்ளேன்.

வாஜ்பாய், நரசிம்மராவ், கருணாநிதி, ஜெயலலிதா, சினிமா நடிகர் சரத்குமார் என பலரை எதிர்த்து போட்டியிட்டு உள்ளேன்.

கடைசியாக கேரளா மாநிலம் வயநாட்டில் நடந்த எம்.பி. தேர்தலில் பிரியங்கா காந்தியை எதிர்த்துப் போட்டியிட்டு 286 வாக்குகள் பெற்றேன். தமிழகத்தில் கடைசியாக விக்கிரவாண்டியில் நடந்த இடைத்தேர்தலில் போட்டியிட்டு 16 வாக்குகள் பெற்றேன்.

கடந்த முறை ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலில் போட்டியிட்டு 8 வாக்குகள் பெற்றேன். தேர்தலில் அதிக முறை போட்டிட்டதற்காக கின்னஸ் சாதனை புத்தகத்திலும் இடம் பெற்றுள்ளேன்.

இன்னும் இந்தியாவில் எத்தனை தேர்தல் வந்தாலும் நான் உயிரோடு இருக்கும் வரை அனைத்து தேர்தலிலும் போட்டியிடுவேன். தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்புமனு தாக்கல் செய்து அதற்காக பிரசாரம் எல்லாம் செய்ய மாட்டேன். எனது நோக்கம் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்பது மட்டும்தான்.

இவ்வாறு அவர் கூறினார்.

இதைத்தொடர்ந்து இன்னும் சில சுயேச்சை வேட்பாளர்கள் இன்று மதியம் வரை தேர்தலில் போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்தனர். வேட்புமனு தாக்கல் செய்ய வந்த வேட்பாளர்களிடமிருந்து, தேர்தல் அலுவலர்கள் வேட்பாளர் படிவம், இணைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் டெபாசிட்தொகை ஆகியவற்றை சரி பார்த்தனர்.

அதன்பின்னர், ஈரோடு கிழக்குத் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரும், மாநகராட்சி ஆணையருமான மனிஷ், வேட்பாளர்களிடமிருந்து வேட்புமனுக்களை பெற்றுக்கொண்டார்.

இந்த நடைமுறைகள் முழுவதும் மாநகராட்சி அலுவலக வளாகம் முழுவதும் அமைக்கப்பட்டுள்ள சி.சி.டி.வி. கேமராக்கள் மூலமாக கண்காணிக்கப்பட்டது.

மேலும், வேட்புமனு தாக்கலை முன்னிட்டு மாநகராட்சி அலுவலக நுழைவு வாசல் மற்றும் வளாகம் முழுவதும், ஈரோடு டவுன் டி.எஸ்.பி. முத்துக்கு மரன், இன்ஸ்பெக்டர் அனுராதா ஆகியோர் தலைமையில் 60க்கும்மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

தினகனி



# சொர்க்கவாசல் திறப்பின் போது இருபிரிவினர் இடையே வாக்குவாதம்: காஞ்சிபுரத்தில் சலசலப்பு

காஞ்சிபுரம், ஜன.12

ஒவ்வொரு ஆண்டும் வைகுண்ட ஏகாதசி விழா அனைத்து பெருமாள் கோவில்களிலும் சிறப்பாக கொண்டாடப்படுவது வழக்கம். புகழ்பெற்ற கோவில்கள் மட்டுமின்றி, பெரும்பாலான பெருமாள் கோவில்கள் மற்றும் பரமபத வாசல் உள்ள கோவில்களில் எல்லாம் வைகுண்ட ஏகாதசி அன்று அதிகாலையில் சொர்க்க வாசல் திறக்கப்படும் நிகழ்வு நடைபெறும்.

அந்த வகையில், இன்று (ஜனவரி 10) அதிகாலையில் திருச்சி ஸ்ரீரங்கம், திருவல்லிக்கேணி பார்த்தசாரதி ஆகிய கோவில்களில் சொர்க்கவாசல் திறக்கப்பட்டது. பல்வேறு பெருமாள் கோவில்களில் சொர்க்கவாசல் திறப்பு நிகழ்ச்சியில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு கோவிந்தா கோவிந்தா என்ற முழக்கத்துடன் சாமி தரிசனம் செய்தனர்.



இந்த நிலையில், காஞ்சிபுரத்தில் உள்ள அஷ்டபுஜ பெருமாள் கோவிலிலும் சொர்க்கவாசல் திறப்பு நிகழ்ச்சியின் போது வடகலை மற்றும் தென்கலை பிரிவினர் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இதனால் கோவில் வளாகத்தில்சிறிது நேரம்சலசலப்பு ஏற்பட்டது. சொர்க்கவாசல் திறப்பை ஒட்டி திவ்ய பிரபந்தம் பாடுவது தொடர்பாக இருபிரிவினர் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

வாக்குவாதத்தில் ஈடுபட்ட வடகலை மற்றும் தென்கலை பிரிவினர் இடையேபேச்சுவார்த்தை நடத்திய காவல் துறையினர் இருபிரிவினருக்கும் திவ்ய பிரபந்தம் பாடுவதற்கு தலா பத்து நிமிடங்கள் ஒதுக்கீடு செய்தனர்.

# ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் தி.மு.க. சார்பில் வி.சி. சந்திரகுமார் போட்டி

சென்னை, ஜன.12

ஈரோடு கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ.வாக இருந்த ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் மரணம் அடைந்தார். இதையடுத்து, இந்த தொகுதிக்கு அடுத்த மாதம் 5ம் தேதி இடைத்தேர்தல் நடைபெறும் என்று தலைமை தேர்தல் ஆணையம் அறிவித்தது.ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் நேற்று முதல் வேட்புமனு தாக்கல் தொடங்கியுள்ளது. வேட்புமனு தாக்கலுக்கு 17ம் தேதி கடைசி நாளாகும்.அதே வேளை, ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் திமுக போட்டியிடுமா? அல்லது திமுக கூட்டணியில் இடம்பெற்றுள்ள காங்கிரஸ் போட்டியிடுமா? என்பது குறித்து குழப்பமான சூழ்நிலை நிலவி வந்தது. இந்நிலையில், ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் திமுக போட்டியிடும் என அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இந்த நிலையில், திமுக சார்பில் போட்டியிடும் வேட்பாளர் அறிவிக்கப்பட்டுள்ளார். அதன்படி ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் வி.சி.சந்திரகுமார் போட்டியிடுவார் என திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். வி.சி.சந்திரகுமார் தற்போது திமுக கொள்கை பரப்பு இணைச் செயலாளர் பதவியில் உள்ளார்.

இவர், இந்த தொகுதியில் 2011ம் ஆண்டு நடந்த சட்டசபை தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர் ஆவார். விஜயகாந்தின் தேசிய முற்போக்கு திராவிட கழகம் சார்பில் போட்டியிட்ட அவருக்கு அ.தி.மு.க.வும் ஆதரவு தெரிவித்து இருந்தது.



அந்த தேர்தலில் வி.சி. சந்திரகுமார் (தே.மு.தி.க.) 69,199 வாக்குகளும், எதிர்த்து போட்டியிட்ட சு.முத்துசாமி (தி.மு.க.) 58, 522 வாக்குகளும் பெற்று இருந்தனர். அப்போது பா.ஜனதா சார்பில் போட்டியிட்ட ராஜேஷ்குமாருக்கு3,244 வாக்குகள் கிடைத்தன.

இதன்பின்னர் 2016ம் ஆண்டு நடந்த சட்டசபை தேர்தலில் சந்திரகுமார்தி.மு.க.வில் சேர்ந்து போட்டியிட்டார். அப்போது அவர் அ.தி.மு.க. வேட்பாளர் தென்னரசுவிடம் தோல்வி அடைந்தார். தென்னரசு 64,879 வாக்குகளும், சந்திரகுமார் 57,085 வாக்குகளும் பெற்று இருந்தனர். தே.மு.தி.க வேட்பாளருக்கு 6,776 வாக்குகளும், பா.ஜனதா வேட்பாளருக்கு 5,549 வாக்குகளும் கிடைத்திருந்தன.

பின்னர் இந்த தொகுதியில் 2021ம் ஆண்டு நடந்த சட்டசபை தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் திருமகன் ஈ.வெ.ரா.வும், பின்னர் 2023ம் ஆண்டு இடைத்தேர்தலில் ஈ.வி.கே.எஸ். இளங்கோவனும் (தி.மு.க. கூட்டணி) வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

# அரசு போக்குவரத்து கழக ஊழியர்களுக்கு சாதனை ஊக்கத்தொகை வழங்க அரசாணை வெளியீடு

சென்னை, ஜன.12

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக ஊழியர்களுக்கு 2024ம் ஆண்டுக்கான சாதனை ஊக்கத்தொகை வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

போக்குவரத்து தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் சாதனை ஊக்கத்தொகை (Performance Incentive) அரசு போக்குவரத்துக் கழகங்களின் ஊழியர்களுக்கு 2024ம் ஆண்டிற்கான சாதனை ஊக்கத்தொகை வழங்குதல் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை: அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்களின் நற்பணியினை கருத்திற்கொண்டும், உற்பத்தி



திறன் அதிகரிப்பு மற்றும் தொழில் அமைதி ஆகியவற்றில் ஊழியர்களின் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையிலும், அரசு போக்குவரத்துக் கழகங்களின் ஊழியர்களுக்கு குறிப்பிட்ட தொகையை சாதனை ஊக்கத்தொகையாக வழங்கப்படுகின்றது. அவ்வாறே 2024ம் ஆண்டிற்கான சாதனை ஊக்கத்தொகை (Performance Incentive) அரசு போக்குவரத்து கழகங்கள், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் மற்றும் பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு ஆகியவற்றில் பணிபுரியும் அரசு போக்குவரத்துக் கழகங்களின் ஊழியர்களுக்கு கீழ் கண்டவாறு வழங்க அரசு இதன் வழி ஆணையிடுகிறது.

அ) 2024ம் ஆண்டில் 200 நாட்கள் மற்றும் அதற்கு மேலும் பணிபுரிந்த ஊழியர்களுக்கு ரூ.625/ (ரூபாய் அறுநூற்று இருபத்தைந்து மட்டும்) வழங்கப்படுகிறது.

ஆ) 2024ம் ஆண்டில் 151 நாட்கள் மற்றும் அதற்கு மேலும், ஆனால் 200 நாட்களுக்கு குறைவாகவும் பணிபுரிந்த ஊழியர்களுக்கு ரூ.195/ (ரூபாய் நூற்று தொண்ணூற்று ஐந்து மட்டும்) வழங்கப்படுகிறது.

இ) 2024ம் ஆண்டில் 91 நாட்கள் மற்றும் அதற்கு மேலும் ஆனால் 151 நாட்களுக்கு குறைவாகவும் பணிபுரிந்த ஊழியர்களுக்கு ரூ.85/ (ரூபாய் எண்பத்தைந்து மட்டும்) வழங்கப்படுகிறது.

ஈ) 2024ம் ஆண்டில் 90 நாட்கள் மற்றும் அதற்கு குறைவாக பணிபுரிந்த ஊழியர்களுக்கு ஒன்றும் வழங்கப்படாது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எத்தனைக் காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே: திமுக அரசு மீது விஜய் விமர்சனம்

சென்னை, ஜன.12

தமிழக வெற்றிக் கழக கட்சியின் தலைவர் விஜய் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

எத்தனைக் காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே, சொந்த நாட்டிலே நம் நாட்டிலே.... என்ற பாடல் வரிகள், தற்போதைய தமிழக ஆட்சியாளர்களுக்கு மிகப் பொருத்தமாக உள்ளன. தேர்தலின்போது போலி வாக்குறுதிகள் அளித்து, மக்களை நம்பவைத்து ஏமாற்ற வேண்டும், தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு மீண்டும்மக்களைஏமாற்ற வேண்டும் என்பதுதான் தமிழக ஆட்சியாளர்களின் எண்ணமாக உள்ளது. இதற்குப் பல்வேறு சான்றுகள் உள்ளன. அதில் மிக முக்கியமானது, நீட் தேர்வு விவகாரம் சார்ந்தது.

கடந்த 2021 தேர்தல் பிரச்சாரத்தின் போது, நாங்கள் ஆட்சிக்கு வந்தால் நீட் தேர்வைக் கண்டிப்பாக ரத்து செய்வோம், நீட் தேர்வை ரத்து செய்யும் ரகசியம் எங்களுக்குத் தெரியும் என்று பிரசாரம் செய்து, தமிழக மக்களை நம்ப வைத்தவர்கள், தற்போதைய ஆட்சியாளர்கள். ஆனால் தற்போது நீட் தேர்வை ரத்து செய்யும் அதிகாரம் ஒன்றிய அரசிற்குத் தான் உள்ளது. மாநில அரசால் ரத்து செய்ய முடியாது என்று தெரிவித்திருப்பது வாக்களித்த மக்களை ஏமாற்றும் செயல் அல்லவா?



எந்தப் பொய்யையும் சொல்லி, தமிழக மக்களை ஏமாற்றிவிடலாம் என்று கனவு காணும் தமிழக ஆட்சியாளர்களின் எண்ணம், இனி வரும் காலங்களில் ஈடேறப் போவதில்லை. என தெரிவித்துள்ளார்.

# திரிவிக்ரமின் அடுத்த படத்தில் அல்லு அர்ஜுனுடன் இணைகிறாரா அனிருத்?



இயக்குனர் சுகுமார் இயக்கத்தில் அல்லு அர்ஜுன், ராஷ்மிகா மந்தனா, பகத்பாசில் நடிப்பில் கடந்த மாதம் 5ம் தேதி வெளியான புஷ்பா 2 படம் ரூ. 1,799 கோடிக்கு மேல் வசூலித்திருக்கிறது. இப்படத்தையடுத்து அல்லு அர்ஜுன், திரி விக்ரம் இயக்கத்தில் நடிக்க உள்ளார்.

இது குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகவில்லைஎன்றாலும், சமீபத்தில்தயாரிப்பாளர் நாக வம்சி இதனை உறுதிப்படுத்தி இருந்தார். இந்நிலையில், இப்படம் தொடர்பானமற்றொரு முக்கிய தகவல் ஒன்று வெளியாகி உள்ளது.

அதன்படி, அனிருத் இப்படத்திற்கு இசையமைக்க உள்ளதாக தகவல் தெரிவிக்கின்றது. இது உண்மையாகும் பட்சத்தில் அல்லு அர்ஜுனுடன் அனிருத் இணையும் முதல் படமாக இது இருக்கும். அனிருத், திரிவிக்ரம் இயக்கத்தில் கடந்த 2018ம் ஆணடு பவன் கல்யாண் நடிப்பில் வெளியான அக்ஞாதவாசி படத்திற்கு இசையமைத்திருந்தார்.

இப்படத்திற்குஇசையமைக்கும்பட்சத்தில்ஏழுஆண்டுகளுக்குப்பிறகுதிரிவிக்ரம்படத்திற்குஅனிருத்இசையமைப்பார்

# அடிலெய்ட்டு டென்னிஸ்: முதல் வீரராக பெலிக்ஸ் அகர் இறுதிப்போட்டிக்கு முன்னேற்றம்



அடிலெய்டு சர்வதேச டென்னிஸ் தொடர் ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வருகிறது. இதில் இன்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் அரையிறுதி ஆட்டம் ஒன்றில் கனடா வீரரான பெலிக்ஸ் அகர் அலியாசிம், அமெரிக்காவின் டாமி பாலுடன் பலப்பரீட்சை நடத்தினார்.

இதில் முதல் 2 செட்டை ஆளுக்கு ஒன்றாக கைப்பற்றிய நிலையில், 3வது செட்டை பெலிக்ஸ் அகர் கைப்பற்றி வெற்றி பெற்றார். பெலிக்ஸ் இந்த ஆட்டத்தில் 7-6, 3-6 மற்றும் 6-4 என்ற செட் கணக்கில் போராடி வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார்.

# ஐ.பி.எல்.2025: பெங்களூரு அணியின் தொடக்க ஆட்டக்காரர்கள் இவர்கள்தான் தலைமை பயிற்சியாளர் தகவல்



10 அணிகள் இடையிலான 18வது ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி அடுத்த ஆண்டு (2025) மார்ச் 14ந் தேதி முதல் மே 25ந் தேதி வரை நடக்கிறது. இந்த தொடருக்கான வீரர்களின் மெகா ஏலம் சவுதி அரேபியாவின் ஜெட்டா நகரில் 2 நாட்களாக ( நவம்பர் 24 & 25ம் தேதிகளில்) நடைபெற்றது. இந்த ஏலத்தில் 577 வீரர்கள் பங்கேற்றனர். மொத்தத்தில் 62 வெளிநாட்டவர் உள்பட 182 வீரர்கள் ரூ.639.15 கோடிக்கு விற்கப்பட்டனர்.

இதில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணியானது ஏலத்திற்கு முன்பாக விராட் கோலி, ரஜத் படிதார் மற்றும் யாஷ் தயாள் ஆகிய 3 வீரர்களை மட்டுமே தக்க வைத்திருந்தது. அதுபோக ஏலத்தில் பில் சால்ட், ஜிதேஷ் சர்மா, லியாம் லிவிங்ஸ்டன் , புவனேஷ்வர் குமார் உள்ளிட்ட முன்னணி வீரர்களை வாங்கியுள்ளது.

விராட் கோலி உள்ளிட்ட நட்சத்திர வீரர்கள் அடங்கிய ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணி 17 சீசன்களாக ஒரு கோப்பையை கூட வெல்லவில்லை என்றாலும் ரசிகர்கள் மத்தியில் செல்வாக்கு மிகுந்த அணிகளில் ஒன்றாக உள்ளது. அதனால் இம்முறை கோப்பையை வென்று ரசிகர்களின் நீண்ட கால ஏக்கத்தை அந்த அணி நீக்குமா? என்ற எதிர்பார்ப்புகள் எழுந்துள்ளன.

இந்நிலையில் பெங்களூரு அணியின் தலைமை பயிற்சியாளரான ஆண்டி பிளவர் அடுத்த ஐ.பி.எல். சீசனுக்கான தங்களது திட்டம் குறித்து முக்கிய தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதன்படி, பெங்களூரு அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக விராட் கோலி மற்றும் பில் சால்ட் களமிறங்க வாய்ப்புள்ளதாக கூறியுள்ளார்.

# புஷ்பா இயக்குனரின் மகள் நடிக்கும் 'காந்தி தாத்தா செட்டு' டிரெய்லரை வெளியிட்ட மகேஷ் பாபு




தெலுங்கு சினிமாவில் முன்னணி இயக்குனராக வலம் வருபவர் சுகுமார். இவரது இயக்கத்தில் சமீபத்தில் வெளியான புஷ்பா 2 ரூ. 1,799 கோடிக்கு மேல் வசூலித்து சாதனைப்படைத்துள்ளது. இவரது மகள் தற்போது சினிமாவில் அறிமுகமாக உள்ளார். அதன்படி, சுகுமாரின் மகள் சுக்ரிதி வேணி பாண்ட்ரெட்டி.

இவர் காந்திய கொள்கையான அகிம்சையை மையமாக கொண்டு உருவாகியுள்ள 'காந்தி தாத்தா செட்டு' என்ற படத்தில் நடித்துள்ளார். இப்படம் ஏற்கனவே பல சர்வதேச திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டு பல பாராட்டுகளையும் விருதுகளையும் பெற்றது. அதுமட்டுமில்லாமல் இப்படத்திற்காக சுக்ரிதி வேணி பாண்ட்ரெட்டி சிறந்த குழந்தை நட்சத்திரத்திற்கான தாதாசாஹேப் பால்கே விருதை வென்றார்.

மைத்ரி மூவி மேக்கர்ஸ், சுகுமார் ரைட்டிங்ஸ் மற்றும் கோபி டாக்கீஸ் தயாரிப்பில் பத்மாவதி மல்லாடி இயக்கிய காந்தி தாத்தா செட்டு வருகிற 24ம் தேதி திரையரங்குகளில் வெளியாகிறது. இப்படத்திற்கு ரீ இசையமைத்துள்ளார். இந்நிலையில், இப்படத்தின் டிரெய்லர் வெளியாகி உள்ளது. இதனை நடிகர் மகேஷ் பாபு வெளியிட்டுள்ளார்.

# மகளிர் ஒருநாள் கிரிக்கெட்: இந்தியாவுக்கு சவாலான இலக்கு நிர்ணயித்த அயர்லாந்து



அயர்லாந்து மகளிர் கிரிக்கெட் அணி முதல்முறையாக இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடுகிறது. அதன்படி இவ்விரு அணிகள் இடையிலான முதலாவது ஒருநாள் போட்டி குஜராத் மாநிலம் ராஜ்கோட்டில் உள்ள சவுராஷ்டிரா கிரிக்கெட் சங்க ஸ்டேடியத்தில் இன்று நடைபெற்று வருகிறது.

இதில் டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்த அயர்லாந்து அணிக்கு டாப் ஆர்டர் பேட்ஸ்மேன்கள் சொற்ப ரன்களில் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தனர். இருப்பினும் கேப்டன் கேபி லீவிஸ் லியா பால் சிறப்பான பார்ட்னர்ஷிப் அமைத்து அணியை நல்ல நிலைக்கு கொண்டு சென்றனர். சிறப்பாக விளையாடி இருவரும் அரைசதம் அடித்து அசத்தினர். லியா பால் 59 ரன்களில் ஆட்டமிழக்க, மறுமுனையில் கேபி லீவிஸ் சதத்தைநெருங்கியதருவாயில்92ரன்களில்ஆட்டமிழந்தார்.

50 ஓவர்கள் முடிவில் அயர்லாந்து 7 விக்கெட்டுகள் இழப்பிற்கு 238 ரன்கள் அடித்துள்ளது. இந்தியா தரப்பில் பிரியாமிஸ்ரா2விக்கெட்டுகள்வீழ்த்தினார்.இதனையடுத்து 239 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற சவாலான இலக்கை நோக்கி இந்திய அணி களமிறங்க உள்ளது.

# காஜல் அகர்வால் நடிக்கும் 'தி இந்தியா ஸ்டோரி' படப்பிடிப்பு தொடக்கம்



தெலுங்கு திரைப்படமான சத்யபாமாவில் கடைசியாக நடித்திருந்த காஜல் அகர்வால், தற்போது இந்தியன் 3, சிக்கந்தர், கண்ணப்பா உட்பட பல பெரிய படங்களில் நடித்து வருகிறார். இந்நிலையில், மேலும் ஒரு பாலிவுட் படத்தின்படப்பிடிப்பைகாஜல்துவங்கி இருக்கிறார்.

சேத்தன் டிகே இயக்கும் 'தி இந்தியா ஸ்டோரி' படத்தின் படப்பிடிப்பு இன்று தொடங்கி உள்ளது. கங்கனா ரனாவத்தின் எமர்ஜென்சி படத்தில் அடல் பிஹாரி வாஜ்பாயாக நடித்திருப்பவரும், அல்லு அர்ஜுனின் புஷ்பா 2 படத்திற்கு டப்பிங் பேசியவருமான ஷ்ரேயாஸ் தல்படே இதில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார்.

பூச்சிக்கொல்லி ஊழலை மையமாக வைத்து உருவாகும் இப்படத்திற்கு சாகர் பி. ஷிண்டே கதை எழுதியுள்ளார். இப்படம் வரும் ஆகஸ்ட் 15 ம் தேதி வெளியாக உள்ளதாக கூறப்படுகிறது. இந்த படம் பற்றிய கூடுதல் விவரங்கள் விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.